**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 173/மா/2025
நாள் 12.06.2026

G.D. குமரேஷ்,
மதுரை. --- முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையாளர்,
மண்டலம் 4 (தெற்கு),,
மதுரை மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்

மதுரை–625 009, காமராஜர் சாலை, கதவு எண் 136A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G.D. குமரேஷ் என்பவரின் 26.04.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.04.2025 அன்று பெறப்பட்டு 173/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை–625 009, காமராஜர் சாலை, கதவு எண் 136A என்கிற முகவரியில் வசிக்கும் திரு.G.D. குமரேஷ் என்பவர் தனது 26.04.2025 மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 4, வார்டு எண் 42, காமராஜர் சாலை, கதவு எண் 136, கட்டிடத்தை வரிப்பிரிவினை செய்து கொடுக்கும்படி G.R. பாலகிருஷ்ணன் (1) G.A.பாஸ்கரன், G.A. விஸ்வநாதன் (2) G.D. குமரேஷ் (3) ஆகிய மூவரும் மனு சமர்ப்பித்தோம் . வரிப்பிரிவினை செய்ததில் எனக்கு சொந்தமான AC Sheet கட்டிடம் 1615 சதுரடி கொண்ட கட்டிடத்திற்கு AC Sheet விகிதத்தில் வரிவிதிப்பு செய்யாமல் RCC லாகட கட்டிடத்தின் மதிப்பில் அடிப்படையில் தவறுதலாக வரிவிதிப்பு செய்திருப்பதை ஆட்சேபித்து, 14.11.2024ல் மேதகு மேயர் அவர்களிடம் மனு சமர்ப்பித்தேன். மனு சமர்ப்பித்ததன் அடிப்படையில் மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 4, உதவி ஆணையாளர் அவர்களின் கடிதம் Z4B5/004309/2004 நாள் 03.01.2025ம் தேதிய கடிதத்தில் AC Sheet கட்டிடத்திற்கு RCC லாகட மதிப்பில் வரிவிதிப்பை திருத்தம் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கு HD/PT/115/25-26/0002162 மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், AC Sheet கட்டிடத்திற்கு RCC லாகட மதிப்பில் தவறுதலாக வரிவிதிப்பு செய்ததை இன்றுவரை திருத்தம் செய்து கொடுக்க இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆகவே, மேதகு நடுவர் அவர்கள் மனுவை கருணையுடன் பரிசீலனை செய்து AC Sheet விகிதத்தில் வரியை திருத்தி விதிக்க தகுந்த உத்தரவை பிறப்பிக்க பணிவுடன் பிராத்திக்கிறேன்."

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 26.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி மண்டலம் 4 (தெற்கு)–ன் உதவி ஆணையாளரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 02.06.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 29.04.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையானது "Insufficient Address" என இம்முறைமன்ற நடுவத்திற்கு திருப்பப்பட்டுள்ளது.

5. இந்நிலையில், மதுரை மாநகராட்சி, மண்டலம் 4 (தெற்கு)–ன் உதவி ஆணையாளர் தனது 01.06.2026 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:–

"மதுரை மாநகராட்சி மண்டலம் 4 (தெற்கு) வார்டு எண் 42, , கதவு எண் 136A, காமராஜர் சாலை, வரிவிதிப்பு எண் 115/042/906477 சுவான்தாரர் பெயர் திரு. G.D. குமரேஷ் தற்போது அரையாண்டு வரி ரூ.50387/– ஆக உள்ளது.

கதவு எண் 136A, வரிவிதிப்பு எண் 115/042/903907 சுவான்தாரர் பெயர் திரு அனுமந்தையர், திரு. ராமமூர்த்தி, திரு தேவதாஸ், திருமதி ராதா என்ற பெயரில் சொத்துவரி இருந்துள்ளதை பாகப்பிரினை ஆவணம் மூலம் வரிவிதிப்பு செய்யப்பட்டதில் மேற்கண்டவாறு புதிதாக வரிவிதிப்பு எண். 115/042/906477 ஆக 01.04.2024 முதல் வரிவிதிப்பு செய்யப்பட்டது. அதன் அளவீடு கீழ்கண்டவாறு,

தரைத் தளம் AC Sheet – 1615 ச. அடி (வணிகம்)

என்ற அளவுகளின்படி UTIS மென்பொருள் மூலம் சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு 01.04.2024 முதல் அரையாண்டு வரி ரூ.47,535/- எனவும், 01.10.2024 முதல் 6% வரி உயர்வுடன் அரையாண்டு வரி ரூ 50,387/- என வரப்பெற்றது. அதற்கான கணக்கீட்டு தாள் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் கணக்கீட்டு தாளில் AC Sheet என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் ஆனால் RCC மதிப்பீட்டின்படியே AC Sheet என்பதற்கும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது தவறாகும் என்றும், AC Sheet மதிப்பின்படி கணக்கீடு செய்து சொத்துவரி நிர்ணயம் செய்து தருமாறு முறையீட்டுள்ளார். மேலும் இம்முறையீட்டு மனு நிலுவையில் உள்ள நிலையில் மனுதாரர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வழக்கு எண் W.P. (MD) No.11668/2026 எண்ணாக வழக்கு பதிவு செய்து தீர்ப்பாணை 22.04.2026–ல் வரப்பெற்றுள்ளது. தீர்ப்பாணையில் உதவி ஆணையாளர் அவர்கள் மனுதாரருக்கு வாய்ப்பு வழங்கி நேராய்வு செய்து சட்டபூர்வமான சொத்துவரி Working Sheet வழங்கி கேட்பு எற்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

அரசாணை எண் 53 நாள் 30.03.2022 மற்றும் மதுரை மாநகராட்சி மாமன்ற தீர்மான எண் 33 நாள் 23.06.2022 (மதுரை மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு நாள் 28.06.2022)படி 31.03.2022 அன்றைய தேதியில் பயன்பாடு மற்றும் கட்டிட அளவீடுகள் எவ்வித மாற்றமின்றி உள்ள கட்டிடத்திற்கு பொதுச்சீராய்வின்படி சொத்துவரி உயர்வு செய்யப்பட்டது.

01.04.2022 முதல் புதிய சொத்துவரி, கூடுதல் சொத்துவரி, பயன்பாடு மாற்றம், இவைகளுக்கு சொத்துவரி விதிப்பதில் RCC கட்டிடம் மற்றும் AC Sheet கட்டிடம் இவற்றிக்கென தனியாக மதிப்புகள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. களப்பணியில் அளவீடு செய்யப்பட்ட அளவுகள் மற்றும் பயன்பாடு ஆகியவற்றை மட்டுமே UTIS மென்பொருளில் ஏற்றமுடியும். கணக்கீட்டு தாள் UTIS மென்பொருளின்படி தாமகவே தயார் செய்து வருவதாகும்.

எனவே தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் வைக்கப்பட்டுள்ள கோரிக்கையின்படியும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வழக்கின் தீர்ப்பாணையின்படியும் மனுதாரர் முன்னிலையில் கட்டிடத்தினை நேராய்வு செய்து உரிய அலுவலர்கள் ஒப்புதல் பெற்று அதன்படி UTIS மென்பொருளில் உள்ளீடு செய்து சொத்துவரி விதித்து அதற்கான Working Sheet மற்றும் கேட்பு வழங்கப்படும் என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது."

6. இதற்கிடையில், மனுதாரர் தன்னுடைய 01.06.2026 நாளிட்ட மின்னஞ்சலில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"Since I am having hearing on 02.06.2026 through phone, but I am not able to attend tomorrow because I am out of station. Sorry for inconvenience."

7. எதிர்மனுதாரர் தரப்பில் மதுரை மாநகராட்சி, மண்டலம் 4 (தெற்கு)–ன் உதவி வருவாய் அலுவலர் 02.06.2026 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மதுரை, காமராஜர் சாலை, கதவு எண் 136A வரிவிதிப்பு எண் 115/042/903907 சுவான்தாரர் பெயர் திரு அனுமந்தைய்யா, திரு ராமமூர்த்தி, திரு தேவதாஸ், திருமதி ராதா என்ற பெயரில் சொத்துவரி இருந்துள்ளதை பாகப்பிரினை ஆவணம் மூலம் வரிவிதிப்பு செய்யப்பட்டதில் திரு.G.D.குமரேஷ் சுவான்தாரருக்கு வரிவிதிப்பு எண். 115/042/906477ன்படி அரையாண்டு வரி ரூ.50,387/- ஆக உள்ளது. மேற்கண்ட வரிவிதிப்பிற்கு அளவீடு ஆனது தரைத்தளம் AC Sheet 1615 ச,அடி (வணிகம்) என்ற அளவுகளின்படி UTIS மென்பொருள் மூலம் சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு 01.04.2024 முதல் அரையாண்டு வரி ரூ.47,535/- எனவும், 01.10.2024 முதல் 6% வரி உயர்வுடன் அரையாண்டு வரி ரூ 50,387/- என கணக்கிடப்பட்டுள்ளது.

மனுதாரர் கணக்கீட்டு தாளில் AC sheet என குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் RCC மதிப்பீட்டின்படி கணக்கீடு செய்தது தவறு என்றும் AC sheet மதிப்பின்படி கணக்கீடு செய்து சொத்துவரி நிர்ணயம் செய்து தருமாறு கோரியுள்ள மனு நிலுவையில் உள்ள நிலையில், மனுதாரரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு எண் W.P (MD)No 11668/2026 தொடரப்பட்டு 22.04.2026 நாளிட்ட தீர்ப்பாணையில் உதவி ஆணையாளர் அவர்கள் மனுதாரருக்கு வாய்ப்பு வழங்கி நேராய்வு செய்து சட்டபூர்வமான சொத்துவரி Working sheet வழங்கி கேட்பு எற்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட நீதிமன்ற ஆணையில் மனுதாரர் பெயர் திரு. G.D.குமரேஷ் என்பதற்கு பதில் திரு. G.A. பாஸ்கரன் என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் திருத்தம் கோரி விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண் 53 நாள் 30.03.2022 மற்றும் மதுரை மாநகராட்சி மாமன்ற தீர்மான எண் 33 நாள் 23.06.2022ல் குறிப்பிட்டுள்ளவாறு பொதுச்சீராய்வில் சொத்துவரி உயர்வு செய்யப்பட்டுள்ளது.01.04.2022 முதல் புதிய சொத்துவரி, கூடுதல் சொத்துவரி, பயன்பாடு மாற்றம், இவைகளுக்கு சொத்துவரி விதிப்பதில் RCC கட்டிடம் மற்றும் AC sheet கட்டிடம் என்று தனியாக மதிப்புகள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. மேலும் கட்டிடங்களை A, B, C என்று வகைப்படுத்தப்பட்டு அவற்றிற்கு முறையே ஒரு சதுரடிக்கு ரூ18/–, ரூ.12/– மற்றும் ரூ.6/– என வரி விதிப்பு முறைபடுத்தப்பட்டுள்ளது.

எனவே மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வழக்கின் தீர்ப்பாணையின்படி மனுதாரர் முன்னிலையில் கட்டிடத்தினை நேராய்வு செய்து உரிய அலுவலர்கள் ஒப்புதல் பெற்று அதன்படி UTIS மென்பொருளில் உள்ளீடு செய்து சொத்துவரி விதித்து அதற்கான Working Sheet மற்றும் கேட்பு மனுதாரருக்கு வழங்கப்படும் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்."

8. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, மின்னஞ்சல் கடிதம் மற்றும் எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம் 4 (தெற்கு)–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 4, வார்டு எண் 42, காமராஜர் சாலை, கதவு எண் 136 A என்ற விலாசத்தில் உள்ள மனுதாரர் குறிப்பிட்டுள்ள கட்டிடமானது G.R.பாலகிருஷ்ணன் (1), G.A பாஸ்கரன், G.A. விஸ்வநாதன் (2), G.D. குமரேஷ் (3) ஆகிய மூவருக்கும் வரிப்பிரிவினை

செய்ததில் தனக்கு சொந்தமான AC Sheet கட்டிடம் 1615 சதுரடி கொண்ட கட்டிடத்திற்கு AC Sheet விகிதத்தில் வரிவிதிப்பு செய்யாமல் RCC லாகட கட்டிடத்தின் மதிப்பில் அடிப்படையில் தவறுதலாக வரிவிதிப்பு செய்திருப்பதை ஆட்சேபித்து மதுரை மாநகராட்சி மேதகு மேயர் அவர்களுக்கு மனு சமர்ப்பித்ததன் அடிப்படையில், AC Sheet கட்டிடத்திற்கு RCC லாகட மதிப்பில் வரிவிதிப்பை திருத்தம் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கு மின்னஞ்சல் மூலம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 4–ன் உதவி ஆணையாளரால் தெரிவிக்கப்பட்டது என்பதும், ஆனால், AC Sheet கட்டிடத்திற்கு RCC லாகட மதிப்பில் தவறுதலாக வரிவிதிப்பு செய்ததை திருத்தம் செய்து கொடுக்க இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதும், எனவே தனது மனுவினை பரிசீலனை செய்து மேற்கண்ட 1615 சதுரடி கொண்ட கட்டிடத்திற்கு AC Sheet விகிதத்தில் வரியை திருத்தி விதிக்க தகுந்த உத்தரவை பிறப்பிக்க கோரியிருப்பது மனுதாரரின் மனுவிலிருந்து அறிய முடிகிறது.

மதுரை, காமராஜர் சாலை, கதவு எண் 136A வரிவிதிப்பு எண் 115/042/906477 சுவான்தாரர் பெயர் திரு.G.D.குமரேஷ் என்ற பெயரில் சொத்துவரி அரையாண்டுக்கு வரி ரூ.50,387/- ஆக உள்ளது என்பதும், வரிவிதிப்பிற்கு அளவீடானது தரைத்தளம் AC Sheet 1615 ச,அடி (வணிகம்) என்ற அளவுகளின்படி UTIS மென்பொருள் மூலம் சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு 01.04.2024 முதல் அரையாண்டு வரி ரூ.47,535/- எனவும், 01.10.2024 முதல் 6% வரி உயர்வுடன் அரையாண்டு வரி ரூ 50,387/- என கணக்கிடப்பட்டுள்ளது என்பதும், மனுதாரர் கணக்கீட்டு தாளில் AC sheet என குறிப்பிடப்பட்டுள்ளதை, RCC மதிப்பீட்டின்படி கணக்கீடு செய்தது தவறு என்றும் AC sheet மதிப்பின்படி கணக்கீடு செய்து சொத்துவரி நிர்ணயம் செய்து தருமாறு கோரியுள்ள மனுதாரரின் மனு நிலுவையில் உள்ள நிலையில், மனுதாரரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு எண் W.P (MD) No.11668/2026 தொடரப்பட்டு 22.04.2026 நாளிட்ட தீர்ப்பாணையில் உதவி ஆணையாளர் அவர்கள் மனுதாரருக்கு வாய்ப்பு வழங்கி நேராய்வு செய்து சட்டபூர்வமான சொத்துவரி Working sheet வழங்கி கேட்பு எற்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது என்பதும், இத்தீர்ப்பாணையில் மனுதாரர் பெயர் திரு. G.D.குமரேஷ் என்பதற்கு பதில் திரு. G.A. பாஸ்கரன் என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் திருத்தம் கோரி விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது என்பதும், அரசாணை எண் 53 நாள் 30.03.2022 மற்றும் மதுரை மாநகராட்சி மாமன்ற தீர்மான எண் 33 நாள் 23.06.2022–ல் குறிப்பிட்டுள்ளவாறு பொதுச்சீராய்வில் சொத்துவரி உயர்வு செய்யப்பட்டது என்பதும், 01.04.2022 முதல் புதிய சொத்துவரி, கூடுதல் சொத்துவரி, பயன்பாடு மாற்றம், இவைகளுக்கு சொத்துவரி விதிப்பதில் RCC கட்டிடம் மற்றும் AC sheet கட்டிடம் என்று தனியாக மதிப்புகள் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்பதும், கட்டிடங்களை A, B, C என்று வகைப்படுத்தப்பட்டு அவற்றிற்கு முறையே ஒரு சதுரடிக்கு ரூ18/–, ரூ.12/– மற்றும் ரூ.6/– என வரி விதிப்பு முறைபடுத்தப்பட்டுள்ளது என்பதும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வழக்கின் தீர்ப்பாணையின்படி மனுதாரர் முன்னிலையில் கட்டிடத்தினை நேராய்வு செய்து உரிய அலுவலர்கள் ஒப்புதல் பெற்று அதன்படி UTIS மென்பொருளில் உள்ளீடு செய்து சொத்துவரி விதித்து அதற்கான Working Sheet மற்றும் கேட்பு மனுதாரருக்கு வழங்கப்படும் என்பது மதுரை மாநகராட்சி மண்டலம் 4 (தெற்கு)–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள, மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 4, வார்டு எண் 42, காமராஜர் சாலை, கதவு எண் 136 A என்ற விலாசத்தில் மனுதாரருக்கு சொந்தமான வரிவிதிப்பு எண் 115/042/906477, 1615 சதுரடி கொண்ட AC Sheet கட்டிடத்திற்கு RCC லாகட கட்டிடத்தின் மதிப்பில் அடிப்படையில் தவறுதலாக வரிவிதிப்பு செய்திருப்பதை AC Sheet விகிதத்தில் வரியை திருத்தி விதிக்க தகுந்த உத்தரவை பிறப்பிக்க கோரி இருந்த நிலையில், மனுதாரர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தொடர்ந்த வழக்கு எண் W.P (MD) No.11668/2026–ல் 22.04.2026 நாளிட்ட தீர்ப்பாணையின்படி மனுதாரர் முன்னிலையில் மேற்கண்ட கட்டிடத்தினை நேராய்வு செய்து உரிய அலுவலர்கள் ஒப்புதல் பெற்று அதன்படி UTIS மென்பொருளில் உள்ளீடு

செய்து சொத்துவரி விதித்து அதற்கான Working Sheet மற்றும் கேட்பு, மனுதாரருக்கு வழங்கப்படும் என்று மதுரை மாநகராட்சி மண்டலம் 4 (தெற்கு)–ன் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, மேற்கண்ட கட்டிடத்தினை மனுதாரர் முன்னிலையில் நேராய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொண்டு சொத்துவரியினை விதிக்குமாறு மதுரை மாநகராட்சி மண்டலம்–4 (தெற்கு)–ன் உதவி ஆணையாளருக்கு உத்திரவிடுமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. G. D. குமரேஷ்,
எண் 136A காமராஜர் சாலை,
மதுரை–625 009.

(2) ஆணையர், மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம், மதுரை–625 002.

(3) உதவி ஆணையாளர்,
மண்டலம்–4 (தெற்கு),
மதுரை மாநகராட்சி,
C.M.R. ரோடு, மதுரை–625 009.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

15/6/26
செயலாளர்.

15/6/26 270

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை –600 032